මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No
ඔබේ අංකය / உமது இல / Your No
දිනය / திகதி / Date: 2023.02.09


சுற்றுநிருப இல. : DFD/ 2023-1

செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
அனைத்து மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்

## 2022/2023 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித்திட்டம்

### மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் மூலம் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள் / கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்பினை அரிசியாக்கல்

2022/2023 பெரும் போகத்தில் நெல் அறுவடைக்கான நியாயமான விலையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தல், மிகை அறுவடையினை அரசாங்கம் கொள்முதல் செய்தல், இக்கட்டான பொருளாதார நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டு “2022/2023 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்” என்ற தலைப்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2023.01.16 ஆந் திகதிய 23/0097/601/007 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் 2023.01.16 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்மானத்திற்கமைய 2022/2023 பெரும் போகத்தில் நெற் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பகற்றல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்படி, நெல் கொள்வனவு மற்றும் நெல் இருப்புக்களை அகற்றும் வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### 2.0 நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்

2022/23 பெரும் போக நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தரளவு அரிச ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மூலம் <u>நாடு நெல்லை மாத்திரமே</u> கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நெல் கொள்வனவுச் செயற்பாட்டின் மூலம், தமது மாவட்டத்திலுள்ள நெல் கையிருப்புகளை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அரிசியியாக்கல் ஆகிய ஆற்றல்களைக் கொண்ட பொருத்தமான சிறிய மற்றும் நடுத்தரளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, அவர்களினூடாக, விவசாயிகளிடமிருந்து நெற் கொள்வனவு செய்தல், பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் கணக்கு வைத்தல் போன்ற பொறுப்புக்கள் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 2.1 நிதி வழங்கல்

மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் மூலம், சிறிய மற்றும் நடுத்தரளவு நெற் உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்படும் அரச நெல் கொள்வனவுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்பான நிதித் தேவை குறித்து, பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அதன்படி அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நேரடியாக மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கு திறைசேரி நிதியை ஒதுக்குவதற்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கும் கட்டுநிதியினை விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கும் அறிவுறுத்தல் வழங்கப்படும். இதன்படி, தேசிய வரவு செலவுத் திணைக்களம் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கு நேரடியாக வழங்கும் என்பதுடன் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் நெல் கொள்வனவுக்கான கட்டுநிதியை குறித்த மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களுக்கு வழங்கும்.

நெற் கொள்வனவு திட்டத்துக்கான நிதி, தேவைக்கேற்ப பொது திறைசேரியினால் அவ்வப்போது விடுவிக்கப்படுவதுடன், நெற் கொள்வனவு நடவடிக்கைகள் முடிந்தவுடன், அந்த நிதியில் மீதமுள்ள நிலுவைகள் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கில் செலுத்தப்படுவதுடன், இது தொடர்பில் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

### 2.2 2022/23 பெரும் போக நெல் கொள்வனவுக்கான சான்றுபடுத்தல் விலை

அதிகபட்ச ஈரப்பதன் 14% மற்றும் அதிகபட்ச பதரளவு 9% இனைக் கொண்ட நெல் சரியான தரமாக கருதப்படுகின்ற அதேவேளை, ஈரப்பதன் 14% இற்கு அதிகமான மற்றும் 22% இற்கு அல்லது அதனைவிட குறைவான நெல் ஈரமான நெல்லாகக் கருதப்படும். குறித்த தரநிலைகளின்படி, கீழ்கண்ட விலையில் நெல் கையிருப்புகளை கொள்வனவு செய்ய வேண்டும்.

I. ஆகக் கூடிய ஈரப்பதன் 14% மற்றும் ஆகக் கூடிய நெற் பதரினளவு 9% கொண்ட உரிய தராதரத்திற்குட்பட்ட **நாடு நெல்** கிலோ கிராம் 01 - ரூபா 100.00

II. ஈரப்பதன் 14% இற்கும் அதிகமான மற்றும் 22% அல்லது அதற்குக் குறைந்த **நாடு நெல்** கிலோ கிராம் 01 - ரூபா 88.00

### 2.3 நெல் கையிருப்பு கொள்வனவு, ஈரப்பதன்மிக்க நெல் உலர்த்துதல் மற்றும் நெல் கையிருப்பு சேமிப்பு களஞ்சியப்படுத்தல்

நெற் கொள்வனவுச் செயற்பாட்டின் மூலம் கையிருப்பினைப் பேணுதல், களஞ்சியப்படுத்தல், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைப் பேணுதல் மற்றும் கணக்கு வைத்தல் தொடர்பான பொறுப்பு மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.3.1 மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களின் உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களினூடாக மேலே 2.2 இல் குறிப்பிட்டுள்ள விலையின் அடிப்படையில் நெல்லினை கொள்வனவு செய்தல் வேண்டும். அதன்போது, அந்தந்த மாவட்டச் செயலர்கள்/ அரசாங்க அதிபர்களினால் நெல் கொள்வனவு செய்யும் ஆற்றலினைக் கொண்ட, நெற் களஞ்சியப்படுத்தல் மற்றும் அரிசியாக்குவதற்குப் பொருத்தமான சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களை இத்திட்டத்தில் இணைத்து, அவர்களுடன் நெல் கொள்வனவு மற்றும் கையிருப்பகற்றல் தொடர்பாக ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். இது தொடர்பான சட்டபூர்வமான தன்மையை உறுதிசெய்யும் வகையில் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒப்பந்தமொன்றினை செய்து

கொள்வதற்கு மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கடந்த போகங்களின் போது மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களினால் செயற்படுத்தப்பட்ட நெற் கொள்வனவுத் திட்டங்களில் ஈடுபட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் 2022/23 பெரும் போகத்திலும் நெற் கொள்வனவில் பங்கேற்பரென எதிர்பார்க்கப்படின், முன்னைய போகங்களில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நெல் இருப்புகளும் அரிசியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேபோன்று, இதற்கு முன்னைய போகங்களில் நெற் கொள்வனவு திட்டங்களில் கலந்து கொண்டு இதுவரை தேவையான அரிசி கையிருப்புக்களை வழங்காத அம்பாறை, திருகோணமலை, பொலனறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள இச்சுற்றுநிருபத்தில் இணைக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினால்/ கூட்டுறவு சங்கங்களினால் குறித்த நிலுவை அரிசி கையிருப்புகள் ஒப்படைக்கப்பட்டு நிறைவுசெய்த திகதியிலிருந்து மாத்திரமே, இத்திட்டத்தில் அவர்களை பங்கேற்கச்செய்ய சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3.2 கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிருப்புகளை உடனடியாக அரிசியாக்கி 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்குள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதனால், அதற்கான நெல்லினை குத்தி முடிக்கும் வகையில், சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவு சங்கங்களின் நெல் குத்தும் திறனைக் கருத்திற் கொண்டு நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணத்தை குறித்த அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க வேண்டும். நிதிக் கோரிக்கைகளை திறைசேரிக்கு சமர்ப்பிக்கும் போது, தமது மாவட்டங்களில் நெற் கொள்வனவுக்கு இணக்கம் தெரிவித்த அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய விபரங்களை அவற்றின் அரிசி குத்துகின்ற மற்றும் களஞ்சியப்படுத்தும் ஆற்றலினையும் நெற் கொள்வனவுக்கு எதிர்பார்க்கப்படும் அளவு போன்ற தகவல்களை தனித்தனியாக **(பின்னிணைப்பு 01)** சமர்ப்பித்தல் வேண்டும்.

2.3.3 தமது மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்வனவு செய்யப்படுவதை அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களும் உறுதி செய்தல் வேண்டும். குறித்த விவசாயிகளிடமிருந்து அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்யும் நெல் கையிருப்புக்கு சம்பந்தப்பட்ட விவசாயியின் பெயரில் பெறுமதி குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழ் மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளரினால் வழங்கப்படுவதுடன், மேற்படி கொடுப்பனவுச் சான்றிதழ் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் இரண்டு பேரினால் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

சம்மந்தப்பட்ட விவசாயின் பெயரில் வழங்கப்பட்ட இக் கொடுப்பனவுச் சான்றிதழினை இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் உரிய கிளைகளில் சமர்ப்பிக்கும் பட்சத்தில், குறித்த வங்கிகள் குறித்த விவசாயியின் வங்கிக் கணக்கிற்கு உரிய பணத்தினை உடனடியாக மாற்றுதல் வேண்டும்.

2.3.4 நெற் கொள்வனவு செய்யப்படும் பிரதேசங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி போன்ற வங்கிகளுக்குரிய கிளைகள், மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் சேவைத் தேவையினைக் கருத்திற் கொண்டு வார இறுதி நாட்களிலும் திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

2.3.5 உரிய தரத்திலில்லாத ஆனாலும் ஈரப்பதன் 14% சதவீத்தினை விஞ்சியதுடன் ஈரப்பதன் 22% அல்லது அதற்குக் குறைவாக கொளவனவு செய்யப்படும் போது, குறித்த நெல்லினை உரிய தரத்திற்கு உலர்த்துவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்கு மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன்போது உரிய தரத்திற்கு நெல்லினை உலர்த்துவதற்கான செலவாக நெல் கிலோ ஒன்றுக்கு ஆகக் கூடியது 4.50 ரூபா சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். ஈரப்பதன் 14% சதவீதத்தினை விஞ்சிய 22% சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த

நெல்லினைக் கொள்வனவு செய்து உலர்த்துகின்ற போது நிறை குறைவடையும் சதவீதம் ஆகக் கூடியது 12.5% ஆகும். அப்படியாயின், ஈரப்பதன்மிக்க நெல்லினை உலர்த்துகின்ற பொழுது குறைவடைகின்ற நெல்லின் அளவு ஆகக்கூடியது 100 கிலோ கிராமுக்கு 12.5 கிலோ கிராம் ஆகும்.

இதன் அடிப்படையில், மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நெற் கொள்வனவின் போதும் உலர்த்தப்படும் பொழுதும் புதிய நிறை மற்றும் ஈரப்பதனின் அளவு ஒவ்வொரு கையிருப்புக்கும் தனித்தனியான பதிவுகள் பேணப்படுதல் வேண்டும்.

2.3.6 நெல் பொதியிடும் உறைகளுக்கான செலவை உள்ளடக்கியதாக நெல் குத்தும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், பொதியிடும் உறைகளுக்கு மேலதிகமாக பணம் வழங்கப்படுவதில்லை. அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்த சிறந்த நிலையிலுள்ள உறைகளை நெல் பொதியிடுவதற்காக பயன்படுத்த வேண்டும்.

2.3.7 செய்கை பண்ணப்பட்ட நிலத்தின் அளவிற்கமைய விவசாயி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்ய முடியுமான நெல்லின் அளவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| **செய்கை பண்ணப்பட்ட நிலத்தின் அளவு** | **கொள்வனவு செய்யப்படும் ஆகக் கூடிய நெல்லின் அளவு (கிலோ கிராம்)** |
|---|---|
| 1 ஏக்கர் வரை | 2,000 |
| 1 ஏக்கர் தொடக்கம் 2 ஏக்கர் வரை | 4,000 |
| 2 ஏக்கரை விஞ்சியது | 5,000 |

2.3.8 அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் 2022/2023 பெரும்போகத்தில் இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் நெல்லினை, அவர்கள் தனிப்பட்டமுறையில் கொள்வனவு செய்யும் நெற் தொகையினையுடன் சேர்க்காது வெவ்வேறாக பிரித்து களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் காணப்படவேண்டும் என்பதுடன், அவ்வாறு வெவ்வேறாக பிரித்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கையினை மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் எடுத்தல் வேண்டும். மேலும், அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் நெல் அரிசியாக்கப்படும் நேரம் வரை நிர்ணயிக்கப்பட்ட நெல் கையிருப்பிலுள்ளதா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

2.3.9 இச்செயற்திட்டத்திற்குத் தேவையான ஈரப்பதனை அளவிடும் மானிகள் மற்றும் தராசு போன்ற அடிப்படைத் தேவைகள் மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் மூலம் முகாமை செய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பில் தேவைப்படுகின்ற போக்குவரத்து ஏற்பாடுகளுக்கு அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் லொறிகள் மற்றும் ரக் வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.0 நெல் கையிருப்புக்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் - அரிசி உற்பத்தி

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க 2022/23 பெரும் போகத்தின் போது கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை உள்ளடக்கிய விதத்தில் ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு 10 கிலோ கிராம் என்ற அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதுடன் அதற்கான அறிவுறுத்தல்கள் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப்படும்.

## 3.1 நெல் கையிருப்புக்களை அரிசியாக்கும் முறை

3.1.1 மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கிணங்க தேவையான அளவு அரிசியை உரிய தினத்தில் வழங்குவது மாவட்ட செயலாளர்களின்/ அரசாங்க அதிபர்களின் பொறுப்பாகும். அதற்காக நெல் குத்துதல் மற்றும் அரசியை வழங்குதல் தொடர்பில் (வழங்கல் செய்யப்பட வேண்டிய திகதி, அளவு, போக்குவரத்துச் செய்யப்படவேண்டிய இடம் போன்றவை) உரிய மாவட்ட செயலாளர்களால்/ அரசாங்க அதிபர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி

ஆலை உரிமையாளர்களுக்கு/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

3.1.2 நெல்லை அரிசியாக்கும் போது, உயர் தரத்திலான அரிசியை உரிய நேரத்தில் வழங்கக்கூடிய விதத்திலும் அரிசி விநியோக நிகழ்ச்சித்திட்டத்திற்கு தடையாக அமையாத விதத்திலும் அரிசி ஆலைகளின் மொத்த ஆற்றலில் இந்த திட்டத்திற்கான அரிசி குத்தும் செயற்பாடுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது மாவட்ட செயலாளர்களின் / அரசாங்க அதிபர்களின் பொறுப்பாகும்.

3.1.3 **நெல் குற்றல் கூலி, அரிசி உறைகளின் விலைகள், போக்குவரத்து மற்றும் நெல்லை அரிசியாகக்கும் சதவீதம்**

- நெல்லை அரிசியாக்கும் போது ஏற்புடையாகும் கட்டணங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

  - **நெல் குற்றல் கூலி**

| இலக்கம் | அரிசி வகை | வழங்கும் அதிகபட்ச தொகை (ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா.) |
|---|---|---|
| 1 | வெள்ளை நாடு (அவிக்கப்பட்டது) | 9.50 |
| 2 | சிவப்பு நாடு (அவிக்கப்பட்டது) | 9.50 |
| 3 | வெள்ளைப் பச்சை | 7.00 |
| 4 | சிவப்புப் பச்சை | 7.00 |

  - **அரிசி போக்குவரத்துச் செலவு**
    அரிசியைப் போக்குவரத்துச் செய்யும் போது 200 கிலோ மீற்றருக்கான (போவதற்கும் வருவதற்குமான) போக்குவரத்துக் கட்டணங்கள் நெல் குற்றல் கூலியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

  - அரிசி பொதி செய்யும் உறைகளுக்கான கட்டணம் ஒரு கிலோ கிராமுக்கான அதிகபட்ச விலை ரூபா 5.00 ஆகும். அதற்கிணங்க 10 கிலோகிராம் உறையொன்றுக்கு வழங்கப்பட முடியுமான அதிகபட்ச விலை. ரூபா 50.00 ஆகும்.

- 2022/23 பெரும்போகத்தில் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கும் போது வழங்கப்பட வேண்டிய அரிசியின் சதவீதம் 65% ஆகும்.

## 3.2 அரிசிக் கையிருப்பை பொதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பொறுப்பேற்றல்

3.2.1 உற்பத்தி செய்யப்படும் அரிசிக் கையிருப்பை 10 கிலோ கிராம் பைகளாகப் பொதி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னர் அவற்றை உரிய முறையில் மாவட்ட செயலாளர்களின்/ அரசாங்க அதிபர்களின் மேற்பார்வையின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு/ கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான களஞ்சியங்களில் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கிணங்க அரிசியைப் பகிர்ந்தளிப்பதற்கு மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து/ கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்றதை உறுதிப்படுத்தி உரிய மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள், கையிருப்பு கிடைத்ததற்கான அறிவித்தலை (GRN), சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும் என்பதுடன் அந்த அறிவித்தலின் பிரதியொன்றை மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

3.2.2 மேற்குறித்தவாறு அரிசிக் கையிருப்பை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து/ கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பொறுப்பேற்றதன் பின்னர் அந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு குற்றல் கூலி, பொதி செய்தல் கட்டணம் உள்ளிட்ட உரிய கொடுப்பனவுகளை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாத்திரம் இணங்கிய வகையில் மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2.3 அரிசிக் கையிருப்பை பொறுப்பேற்றல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் தமது மாவடத்தினுள்ளேயும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு வழங்கப்படும் அரிசிக் கையிருப்பு பற்றிய விரிவான அறிக்கைகளை உரிய நிறுவனங்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக வழங்கக்கூடிய வகையில் வைத்திருத்தலும் கணக்கீடு செய்தலும் மாவட்ட செயலாளர்களின்/ அரசாங்க அதிபர்களின் பொறுப்பாகும்.

3.2.4 மேலே 2.3.1 ஆம் பந்தியின் கீழ் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கிணங்க உரிய அரிசிக் கையிருப்பை வழங்காத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பில் அந்த ஒப்பந்தங்களுக்கிணங்க மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்/ பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**4.0 ஏனைய விடயங்கள்**

நெற் கொள்வனவு செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

4.1 களஞ்சியங்களிலுள்ள நெல் மற்றும் அரிசி கையிருப்புகளைப் பாதுகாப்பதற்கு தேவைக்கேற்ப சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளை நியமிக்க மாவட்டச் செயலர்கள்/ அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 நெற் கொள்வனவின் போது ஏற்பட்ட தொழிற்பாட்டு செலவினங்களை உரிய நிதிப் பிரமானங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் பிற அரச அனுமதிகளுக்குட்பட்டு மேற் கொள்வதற்கு மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 ஒவ்வொரு மாவட்டத்திலும் நெற் கொள்வனவு செயற்றிட்டத்தைச் செயற்படுத்துவதற்கு பதவிநிலை அலுவலர் ஒருவரினை நியமித்து அவர் தொடர்பான விபரங்களை பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

4.4 நெல் கொள்வனவு மற்றும் நிதிப் பயன்பாடு பற்றிய தினசரி முன்னேற்றம் **பின்னிணைப்பு 02** இன் படி தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் நெல் கையிருப்பை அரிசியாக்கல் மற்றும் அரிசியினைப் பாரமெடுத்தல் பற்றிய முன்னேற்றம் **பின்னிணைப்பு 03** இன் படி தயாரிக்கப்பட்டு பொது திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4.5 நெற் கொள்வனவு மற்றும் அரிசியாக்கல் நிறைவடைந்த தினத்திற்கு பின்னர் உரிய மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெற் தொகை மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி தொடர்பான விபரமான அறிக்கை உரிய மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரின் கையொப்பத்துடன் பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

4.6 நெற் கொள்வனவு செயற்றிட்டத்திற்கு தேவையேற்பட்ட போது அவ்வப்போது நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் நிதி வழங்கப்பட்டிருப்பின் அந்நிதியின் எஞ்சிய மீதித் தொகை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய அனவல் கடிதமொன்றுடன் உடனடியாக நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு மீண்டும் அனுப்புதல் வேண்டும்.

நெற் கொள்வனவு மற்றும் அரிசியாக்கல் செயற்றிட்டம் தொடர்பாக பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்களின் விபரம் பின்வருமாறு;

| பெயர் | பதவி | தொ.பேசி இல. | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| செல்வி. கீதா விமலவீர | பணிப்பாளர் நாயகம் | 011 - 2484542 | dgdf@dfd.treasury.gov.lk |
| திரு. எஸ். ஹேமந்த விஜித குமார | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 011 - 2484595<br>071 - 5349063 | kumara.shv@dfd.treasury.gov.lk |
| திருமதி டபிள்யூ.ஏ.என். துஷாரி | பணிப்பாளர் | 011 - 2484596<br>071 - 5341937 | thushari.wan@dfd.treasury.gov.lk<br>dfdmofdata2015@gmail.com |

**ஒப்பம்/ மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் - தகவலுக்காக
2. செயலாளர், கமத் தொழில் அமைச்சு - தகவலுக்காக
3. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவித்திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
5. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
6. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
7. கணக்காய்வாளர், கணக்காய்வாளர் திணைக்களம் – தகவலுக்காக
8. பொது முகாமையாளர், இலங்கை வங்கி - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
9. பொது முகாமையாளர், மக்கள் வங்கி - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
10. பொது முகாமையாளர், பிராந்திய அபிவிருத்தி வங்கி - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்

**Annexure 01**

## List of Small and Medium Scale Paddy Millers who expect to Participate for the Government Paddy Purchasing and Disposal Programmes for the Maha Season - 2022/23

**District : ......................................................**

| # | Name of Small and Medium Scale Paddy Miller | National Identity Card Number | Name and address of the mill | Is there any outstanding rice stock to be supplied in previous seasons (Yes/No) | Daily Paddy milling Capacity (Kg) | Quantity of paddy expected to be purchased (Kg) |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| .... | | | | | | |
| .... | | | | | | |
| **Total** | | | | | | |

I certify that the above information is correct.

| ............................ | ............................ | ............................ |
|---|---|---|
| Prepared By | checked by | Approved by |
| Name : | Name : | Name : |
| Designation : | Designation : | Designation : |
| Date : | Date : | Date : |

Name of the Coordinating Officer :
Designation :
Phone Number (Office/Personal) :

Annexure 02

# Government Paddy Purchasing and Disposal Programme 2022/23 Maha Season

## Report on Quantity of Paddy Purchased as at ...........

**District : ....................................................**

**Impress received from the General Treasury : Rs..........................................**

| Quantity of paddy purchased (kg) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Standard Paddy (maximum moisture content 14 %) | | | Wet paddy (moisture content more than 14% and equal or less than 22% ) | | | Total Quantity purchased |
| White Nadu | Red Nadu | Total | White Nadu | Red Nadu | Total | |
| *(1)* | *(2)* | *(3) = (1)+(2)* | *(4)* | *(5)* | *(6)= (4)+(5)* | *(7)=(3)+(6)* |
| | | | | | | |

I certify that the above information is correct.

| | | |
|---|---|---|
| ........................... | ........................... | ........................... |
| Prepared By | checked by | Approved by |
| Name : | Name : | Name : |
| Designation : | Designation : | Designation : |
| Date : | Date : | Date : |

Name of the Coordinating Officer :
Designation :
Phone Number (Office/Personal) :

Annexure 03

## Government Paddy Stock Disposal Programme - 2022/23 Maha Season

## Report on Quantity of rice handed over as at ....................

District : .......................................................

| | (1) | (2) | | | (3) | | | (4) | | | 5 = ((2) + (4)) | | | (6) | | | (7) | | | | | | (8)' |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| # | Name of Small and Medium scale Paddy Miller | Quantity of standard (moisture level 14%) Paddy purchased and stored (kg) | | | Quantity of wet paddy (14% - 22%) purchased and stored (kg) | | | | | | Total Quantity of paddy stored (Kg) | | | Quantity of rice that can be produced (Kg) | | | Quantity of rice handed over to District Secretaries (Kg) | | | | | | No of bags @ 10Kg |
| | | | | | Before drying (As wet paddy) | | | After drying (As dried paddy) | | | | | | | | | | | | | | | |
| | | White Nadu | Red Nadu | Total | White Nadu | Red Nadu | Total | White Nadu | Red Nadu | Total | White Nadu | Red Nadu | Total | White Nadu | Red Nadu | Total | par boiled White Nadu | White raw | Boiled red Nadu | Red raw | Total | | |
| 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| .... | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| .... | Total | | | | | | | | | | | | | | | | | | | | | | |

I certify that the above information is correct.

............................
Prepared By

Name :
Designation :
Date :

............................
Checked by

Name :
Designation :
Date :

............................
Approved by

Name :
Designation :
Date :

Name of the Coordinating Officer :
Designation :
Phone Number (Office/Personal) :